பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

07 11 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வந்தேமாதர பாடலின் 150வது ஆண்டு விழா கொண்டாட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.
- இந்தியா-லக்ஸம்பர்க் இடையே விண்வெளி ஆய்வுகளில் ஒத்துழைப்பு வழங்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- பிஹார் சட்டப்பேரவைக்கான முதற்கட்ட தேர்தலில் 64 புள்ளி ஆறு ஆறு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் கூட்டுறவு வங்கி வட்டியை குறைப்பதாக கூறிய திமுக அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.
- இந்திய ஹாக்கியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

**<<<<>>>>**

வந்தேமாதர பாடலின் 150வது ஆண்டு விழா கொண்டாட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியின்போது நிறைவு தபால் தலையையும், நாணயத்தையும் அவர் வெளியிடுகிறார்.

வந்தேமாதரம் பாடல் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனையும் தேசபக்தியை தூண்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளதாக பிரதமர் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனையொட்டி வந்தேமாதரம் பாடல் பொது இடங்களில் பாடப்படும் என்றும், இதில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒற்றுமையையும், தேசத்தின் பெருமை எடுத்துரைக்கும் இந்தப் பாடலை 1875ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம்

Bankim Chandra Chatterji தனது ஆனந்த் மட் நாவலில் எழுதினார்.

இதன் 150வது ஆண்டு விழா ஓராண்டு நடைபெற இருப்பதாக மத்திய அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா-லக்ஸம்பர்க் இடையே அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளி ஆய்வுகளில் ஒத்துழைப்பு வழங்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் லக்ஸம்பர்க் நாட்டின் தூதர் திரு. Christian Biever சந்தித்து உரையாடினார்.

அப்போது பைசர் பாதுகாப்பு, குவாண்டம் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் புதிய முயற்சிகளை கூட்டாக எடுப்பது குறித்து உரையாடினார்.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைக்கான முதற்கட்ட தேர்தலில் 64 புள்ளி ஆறு ஆறு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த தேர்தலில் அம்மாநில துணை முதலமைச்சர்கள் திரு. சாம்ராட் சௌத்ரி, விஜயகுமார் சின்ஹா உள்ளிட்ட 16 அமைச்சர்களும் ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவரும், அக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளருமான திரு. தேஜஸ்வி பிரசாத் யாதவ் ஆகியோர் போட்டியில் உள்ளனர்.

வாக்குப்பதிவின்போது ஒருசில இடங்களில் வன்முறைகள் நடைபெற்றன.

அதுதவிர பொதுவாக தேர்தல் அமைதியான முறையில் நடந்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் கூட்டுறவு வங்கி வட்டியை 12 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாக குறைப்பதாக கூறிய திமுக அரசு இதுவரை அதை அமல்படுத்தவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

உடுமைலைப்பேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், திருப்பூர் மாவட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவு வங்கி அமைப்போம் என்று கூறிய திமுக அரசு, இதுவரை அதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

நெசவாளர்களுக்கான உதவித்தொகை ஆயிரம் ரூபாயில் இருந்து 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்படும் என்று திமுக அரசு உறுதியளித்திருந்தது. அதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என்று கூறினார்.

மக்கள் மீது எந்தவித அக்கறையும் இல்லாமல் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் ஆட்சி செய்வதாக குற்றம் சாட்டினார்.

மாநில மக்களின் நலன்களைப் பாதுகாப்பதில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும், இதுவரை 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை தமிழகத்தில் மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

அரசுப் பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் அறிவியல் தொழில்நுட்பங்களை நேரடியாக விளக்கும் நிகழ்ச்சி தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்றது.

மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் குழுமத்தின் விஞ்ஞானிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

வகுப்பறைக் கற்றலுக்கு அப்பாற்பட்டு அறிவியல் ஆய்வகங்களை தொடர்புகொள்ளும் வித்தில் எளிய அறிவியல் பரிசோதனைகளை விஞ்ஞானிகள் செய்து காண்பித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மூத்த விஞ்ஞானி திரு. பாரிவள்ளல் கலந்துகொண்டு அறிவியல் தொழில்நுட்ப சாதனைகள் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

இந்த 2 நாள் நிகழ்ச்சி தங்களுக்கு பயனுள்ளதாக அமைந்ததாக மாணவிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

போலியான முதலீடுகளை ஊக்குவிக்கும் விளம்பரங்களை முக்கிய சமூக வலைதளங்கள் மற்றும் தேடு பொறிகள் வெளியிட வேண்டாம் என்று செபி என்றழைக்கப்படும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

செபி அமைப்பிடம் பதிவு செய்துள்ளவர்கள் மட்டுமே முதலீடுகள் மற்றும் சேவைகள் குறித்து விளம்பரம் வெளியிடலாம் என்றும் கூறியுள்ளது.

மேலும் உண்மையான முதலீடுகளைக் காண சில பிரத்யேக குறியீடுகளை நிறுவனங்கள் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

முதலீட்டாளர்கள் பதிவு செய்யப்பட்ட வர்த்தக அமைப்புகள் மூலமாக ஆன்லைன் வர்த்தகங்களை மேற்கொள்ளலாம் என்று கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பாகிஸ்தான் மற்றும் ஆஃப்கனிஸ்தான் இடையிலான மூன்றாம் கட்ட அமைதிப்பேச்சுவார்த்தை இஸ்தான்புல்லில் தொடங்கியுள்ளது.

<<<<>>>>

நேபாளத்தில் கடந்த மாதம் நடைபெற்ற போராட்டத்தின்போது உயிரிழந்த 45 பேரை தியாகிகளாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

நாகாலாந்து மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வயது முதிர்ந்தோருக்கான இல்லம் அமைக்கப்படும் என்று அம்மாநில சமூகநலத்துறையின் ஆலோசகர் திரு. Wangpang Konyak தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

திருவாரூர் ரயில் நிலையத்தில் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணிகளை திருச்சி ரயில்வே கோட்ட பொதுமேலாளர் நேரில் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் கரியம்பட்டி அரசு கல்லூரி வளாகத்தில் சிறப்பு மருத்து முகாம் நாளை நடைபெறுகிறது. இதில் அப்பகுதி மக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தின்போது பாதிக்கப்பட்ட நபர்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட 11 ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே லாரி மீது அரசுப் பேருந்து மோதியதில் பேருந்தின் ஓட்டுநர் உட்பட 2 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

திருவண்ணாமலை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட வேங்கிக்கால் ஏரி நிரம்பி வழிகிறது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தொடர்பான வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் கண்காணிப்பாளர்களுக்கான பயிற்சியை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தொடங்கி வைத்தார்.

**<<<<>>>>**

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பொதுவினியோக திட்ட சிறப்பு முகாம் நாளை நடைபெறுவதாகவும், இந்த முகாமில் முகவரி மாற்றம் மற்றும் பெயர் திருத்தங்கள் உள்ளிட்ட பல்வேறு குறைகளை சரிசெய்துகொள்ளலாம் என்று அம்மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சந்திரகலா தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்திய ஹாக்கியின் நூற்றாண்டு கொண்டாட்டம் இன்று தொடங்குகிறது.

இதன் ஒரு பகுதியாக 550 மாவட்டங்களில் ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட போட்டிகள் நடைபெற உள்ளன.

இன்று காலை புதுதில்லியில் உள்ள மேஜர் தியான்சந்த் விளையாட்டரங்கில் இந்திய ஹாக்கியின் சாதனைகள் குறித்த சிறப்பு நிழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் ஹாக்கிப் போட்டிகளில் சிறப்பாக விளையாடி நாட்டிற்கு பெருமை சேர்த்த வீரர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

இந்திய ஹாக்கி தொடர்பான புகைப்படக் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 8 ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா தங்கப்பதக்கம் பெற்றுள்ளது.

மேலும் 13 போட்டிகளில் இறுதிப்போட்டி வரை விளையாடி உள்ளது.

<<<<>>>>

2026ஆம் ஆண்டுக்கான மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் அணிகள் தக்க வைத்த வீராங்கனைகள் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

நடப்பு சாம்பியனான மும்பை அணி ஹர்மன் ப்ரீத் கவுரையும், பெங்களூரு அணி ஸ்மிருதி மந்தனாவையும் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

<<<<>>>>

பஞ்சாப் மாநிலம் அம்ரித்சரில் நடைபெற்ற தேசிய சப்ஜூனியர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் மேற்குவங்கம் 3-0 என்ற கோல் கணக்கில் தில்லியை வீழ்த்தி கோப்பையைக் கைப்பற்றியது.

<<<<>>>>